மாண்புமிகு திரு. செ. மாதவன்: மத்திய அரசின் கொள்கை என்ன என்பது கனம் அங்கத்தினருக்குத் தெரியும். அண்மையில் அவர்கள் டீ-கண்ட்ரோல் அறிவித்திருக்கிற காரணத்தால், ஓரளவுக்கு நம்முடைய சர்க்கரை ஆலைகளுக்கு நிவாரணம் கிடைத்திருக்கிறது என்று நாம் எண்ணலாம். ஆனால், பூரணமாக நம்முடைய சர்க்கரை ஆலைகளுக்கு விமோசனம் கிடைக்க வேண்டுமானால், மத்திய அரசு இதைப்பற்றித் திட்டவட்டமான ஒரு கொள்கையை வகுத்து, இந்திய நாடு முழுவதும் சிமெண்ட் தொழிற்சாலைகளை, எப்படி உற்பத்திக்குப் பாதகம் இல்லாது விலையை நிர்ணயித்து அவர்கள் நடத்துகிறார்களோ அதைப் போல, சர்க்கரைத் தொழிற்சாலைகளையும் அவர்கள் நடத்துவதற்கு முன்வரவேண்டும் என்று நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்தியா பூராவிலும் இருக்கக் கூடிய சர்க்கரை ஆலை அதிபர்கள் விவசாயிகளுக்கு 45 கோடி ரூபாய் வரையிலும் கொடுக்கவேண்டிய பாக்கி இருக்கிறது என்று சமீபத்தில் மத்திய அரசு கொடுத்த பதிலிலிருந்து நான் அறிந்தேன். அம்மாதிரியாகத் தமிழகத்திலும் பாக்கிகள் அதிகமாக இருந்துக்கொண்டிருக்கின்றன. கூட்டுறவு முறையில் இயங்கக்கூடிய சர்க்கரை ஆலைகள் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நிலையில் மத்திய அரசுக்கு, சர்க்கரை ஆலைகளைத் தேசியமயமாக்கவேண்டும் என்று சிபார்சை நமது அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நம்முடைய அரசின் கொள்கைப்படி, மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதியைப் பெற்றிருக்கிறோம். அதற்கான முயற்சிகளில் இப்பொழுது ஈடுபட்டு வருகிறது. இதுவே போதும் என்று கருதுகின்றோம்.

தமிழ்நாட்டில் தொழிற்பேட்டைகள்

* 22. வினா—**திரு. நா. வீராசாமி:** மாண்புமிகு தொழில்-துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை Revenue Division களில் Industrial Estate-கள் அமைக்கப்பட்டுள்ளன?

(இ) இன்னும் எத்தனை கோட்டங்களில் அமைக்கப்படவிருக்கின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்:

(அ) தமிழ்நாட்டில் 33 வருவாய்க் கோட்டங்களில் தொழிற் பேட்டைகள் நிறுவப்பட்டுள்ளன.

(இ) மேலும் 15 வருவாய்க் கோட்டங்களில் தொழிற் பேட்டைகள் அமைக்கப்படவிருக்கின்றன.

1971 ஜூன் 22]

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய ஆட்சி பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பின்னர், கிராமப் பகுதிகள் தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் சில சலுகைகளையெல்லாம் அளிப்பதாக இப்பொழுது அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அந்த அடிப்படையில் வடார்க் காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டை, செய்யாறு போன்ற கோட்டங்களில் இப்படிப்பட்ட இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகள் அமைக்க ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்தும் கூட, இன்னும் இந்தப் பணி ஆரம்பிக்கப்படவில்லை. எனவே, உடனடியாக ஆரம்பிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒவ்வொரு பகுதியிலும் இது போன்ற இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்களை உருவாக்கி, தொழில் அதிபர்களுக்கு அளிப்பதென்பது முந்தைய அரசுத் திட்டமாக இருந்தது. இப்பொழுது எந்தப் பகுதியிலாவது தொழில் துவங்க முன்வருவார்களானால் அவர்களுக்கு ஆங்காங்கு இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்களை நாமே ஹையர் பர்ச்சேஸ் முறையில் கட்டிக் கொடுப்பதென்று நம்முடைய அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது. அதற்காகப் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் (SIDCO) மூலமாக அந்தப் பணி உதவி செய்யப்பட்டு வருகிறது. வடார்க்காடு மாவட்டத்தில் முந்தைய அரசுக் காலத்தில் இராணிப்பேட்டையில் 200 ஏக்கரா நிலம் வாங்கி வைக்கப்பட்டிருந்தது. அது திட்டமிடப்படாது வாங்கப் பட்ட காரணத்தால் அங்கே தொழில்களைத் தொடங்க வாய்ப் பில்லாமலிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர், தொழிற் துறையிலே ஈடுபாடு உள்ளவர்களுடைய முயற்சிக்கு ஊக்கம் தந்து, அரசாங்க உதவியுடன் தொழில் பேட்டைகள் உருவாக்க வேண்டும் என்று அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஆத்தூர் பிளாக், ரெட்டியார் சத்திர பிளாக் போன்ற பகுதிகளில் தொழில் வளர்ச்சியில்லாமல் பொது மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அந்தப் பகுதிகளில் தொழிற் பேட்டைகள் அமைக்க அரசாங்கம் அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆத்தூரில் நெசவுத் தொழிலை நல்ல முறையில் நடத்தி, பாடுபடுகிறார்கள். அந்த முயற்சி வளர திட்டம் இருந்தால் அரசாங்கம் பரிசிலிக்கும்.

திரு. மா. பா. சாரதி : தலைவரவர்களே, இராணிப்பேட்டை கோட்டத்தில் 4 நகராட்சிகள் அடங்கியிருக்கின்றன. டவுனைப் பொறுத்தவரையில் தொழில் செய்ய அநேகம் பேர் முன் வருகிறார்கள். ஆகையால் வேலூர் போன்ற பெரிய நகரங் களில் தொழிற்பேட்டை ஆரம்பிக்க அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர் களிடத்திலே அதைப்பற்றி நான் விவாதித்திருக்கிறேன். யாராவது

தொழிற்சாலைகள் தொடங்கத் தயாராகயிருப்பார்களேயானால் அவர்களைக் கொண்டு வந்தால், ஏராளமான ரூபாய் செலவு செய்து கட்டிடங்கள் கட்டித் தருகிறோம் என்று சொன்னேன். இதுவரை அவர்கள் ஒன்றும் செய்யவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட சில இடங்களில் ஆரம்பிக்கப்படவில்லை. அந்தமாதிரி நிலத்தை வேறு வேலைக்குப் பயன்படுத்துவார்களா? அல்லது ஆர்ஜிதம் செய்யப்பட்ட அவர்களிடமே திருப்பிக் கொடுத்துவிட்டால் அவர்களாவது விவசாயம் செய்வார்கள் அல்லவா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் முன்பே சொன்னேன். அதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துக்களைக் கேட்டிருக்கிறோம். அவர்களும் அந்த மாவட்டத்திலுள்ள தொழிலதிபர்களை அழைத்துப் பேசியிருக்கிறார்கள். இறுதி முடிவு எடுத்தவுடன் என்ன செய்யலாம் என்பதைப்பற்றி முடிவு செய்யலாம்.

திரு. வீ. இராசகோபால் : தலைவரவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் வந்தவாசி மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கு தொழிற்சாலை ஏற்படுத்தி அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்களுடைய ஆசைக்கு என் பாராட்டுதல்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, சிறு தொழில்கள் செய்து உற்பத்தியாகும் பொருள்களை அந்நிய நாடுகளில் விற்க அவர்களுக்கு அரசாங்கம் துணை புரிகிறதா? அவர்களுக்கு வியாபாரத் துறையிலே அனுபவம் இல்லாததால் பொருள்களை விற்க முடியாமல் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, அரசாங்கம் எந்தெந்தத் துறையிலே எப்படிச் செய்ய வேண்டுமென்று அட்வைஸ் வழங்குமா ? அந்நிய நாடுகளில் விற்க அரசாங்கம் ஆயத்தங்கள் செய்து கொடுக்குமா ? அந்தத் தொழில்களிலே, பொருள்களை விற்க முடியாத சூழ்நிலையிலே பொருள்கள் தேங்கியிருப்பதை அரசாங்கம் உணர்ந்து, அந்தத் துறையிலே அவர்களுக்கு ஆலோசனை கூறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதைப்போன்ற கருத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. 'எக்ஸ்போர்ட் ப்ரொமோஷன்' என்ற அடிப்படையிலே உருவாக்கி, சிறு தொழில் மூலம் உற்பத்தி செய்யும் பொருள்களை இந்தியாவிற்குள்ளேயும், இந்தியாவிற்கு அப்பால் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யும் பொறுப்பை இந்தச் சிறு தொழில் வாரியம் எடுக்க வேண்டுமென்று அரசாங்கம் முடிவுக்கு வந்திருக்கிறது. என்ன செய்யலாம் என்று பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

1971 ஜூன் 22]

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, an Industrial Estate has been sanctioned for Hosur. May I know from the Hon. Minister for Industries when it is going to function?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அண்மையில் கிருஷ்ணகிரிக்கு வந்திருந்தார்கள். அங்கு பல ஆண்டுகளாக இண்டஸ்டிரியல் எஸ்டேட்டில் யாருமே இல்லாமல் காலியாகக் கிடப்பதை அவர்களும் பார்த்தார்கள். எனவே, ஹோசூரில் மீண்டும் கட்டுவது பொருத்தமா என்று பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, ஏற்கனவே கட்டப்பட்ட தொழிற்சாலைகளில் வேலை நடக்காமல் இருக்கிறதா ? அப்படியானுல் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுத்திருக் கிருர்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைத்தான் முன்பே சொன்னேன். அப்படிப் பல இடங்களில் இருக்கிறது. ஆனுல் தொழில் வளர்ந்திருக்கும் இடங்களில் ஏராளமான இண்டஸ் டிரியல் எஸ்டேட்கள் கட்டுகிருர்கள். ஆனுல் முன்பு அரசாங்கம் எடுத்த முடிவு, ஒவ்வொரு கோட்டத்திலும் பரவலாக அமைய வேண்டுமென்று அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே சில இடங் களில், மொஃபசலில் சிலயிடங்களில் கிராக்கியில்லாத சூழ்நிலை இருக்கிறது. சென்னையைப் பொறுத்தவரையில் ஏராளமான கிராக்கி இருக்கிறது. ஆகவே, தொழில் வாய்ப்பு உள்ள அப்படிப் பட்ட இடங்களில் ஆரம்பிக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்திருக்கிறது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, வருவாய்க் கோட்டங் களில் இத்தகைய தொழிற் பேட்டைகள் என்ன காரணங்களை வைத்துத் தொடங்கப்படுகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த அரசாங்கம் பொறுப் பேற்பதற்கு முன்னுல் எடுத்த முடிவு, தொழில்களெல்லாம் பரவலாக எல்லா மாவட்டங்களிலும் அமைக்க வேண்டுமென்று ஒவ்வொரு கோட்டத்திற்கும் இண்டஸ்டிரியல் எஸ்டேட் என்ற முடிவைக் கொண்டிருந்தார்கள். அதிலே சில நடக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதால், இந்த அரசாங்கம் புதிய முடிவை எடுத்தது. எங்கெங்கே வாய்ப்பு இருக்கிறதோ அப்படிப்பட்ட இடங்களில் அமைக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் திருப்பரங்குன்றம் பஞ்சாயத்து யூனியனில், கப்பலூருக்கு அருகாமையில் இடத்தை வாங்கி தொழிற்பேட்டை அமைக்க வேலை ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. இது எவ்வளவு நாளில் அல்லது எவ்வளவு வருஷத்திற்குள்ளே அங்கே அமைக்கப் படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த இடத்தை வாங்கி, சிறு தொழில் வளர்ச்சிகளுக்காக ஏராளமான தனியார் தொழில்கள்

தொடங்கவேண்டுமென்று, இண்டஸ்டிரியல் டெவலப்டு பிளாட்ஸ் என்ற முறையிலே நாம் பகிர்ந்து கொடுக்கிறோம். இப்போதே சில தொழில்கள் ஆரம்பித்து வருகிறார்கள். இன்னும் ஏராளமான தொழில்கள் வரலாம், மதுரை பக்கத்திலே இருப்பதாலே. வருபவர்களுக்குத் தண்ணீர் வசதி, மின்சார வசதி, பண உதவி முதலியவைகளை நம்முடைய தொழில்துறை கவனித்து வருகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது 15 கோட்டங்களிலே இன்னும் அமைக்கப்படவிருக்கின்றன என்று சொன்னார்கள். அது என்னென்ன கோட்டங்கள் என்று அறிவிக்கலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீண்ட பட்டியல் இருக்கிறது. சில மாவட்டங்களிலே அமைக்கப்படவிருக்கிறது. சில மாவட்டங்களில் அமைக்கப்படவில்லை. தனியாகக் கேள்வி கேட்டால் எழுத்து மூலமாகப் பதில் தரலாம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, we have been given to understand that in many of the Industrial estates, industries are suffering for want of raw materials and has this been brought to the notice of the Government and if so what action has been taken in regard to the matter?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை அறிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். நம் நாட்டில் கிடைக்கும் மூலப்பொருட்களைத் தேடித் தரும் பொறுப்பை நம்முடைய சிட்கோ, சிறுதொழில் வாரியம் ஏற்றிருக்கிறது. மகாராஷ்டிரத்தில் செய்ததுபோல பல கோடி ரூபாய்களுக்கு நாமே பொருள்களை வாங்கிப் பகிர்ந்து கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் பொருள்களைப்பற்றி மத்திய அரசுதான் முடிவு செய்ய வேண்டும். அதிலே பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. இந்திய நாட்டிலே மத்திய அரசாங்கத்தின் பொறுப்பிலே உள்ள தொழிற்சாலைகளிலிருந்து பெறப்படும் மூலப்பொருள்கள், குறிப்பாக அயர்ன் அண்ட் ஸ்டீல் மெட்டீரியல்ஸ் ஏராளமாகத் தேவைப்படுகின்றன. ஆனால் அது சரியாக விநியோகிக்கப்படவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. இதை மத்திய அரசாங்கத்திடம் எடுத்துக் கூறியுள்ளோம்.

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, சிவகாசிக்கு அருகாமையில் உள்ள ஒரு கிராமத்தில் கூட்டுறவு முறையிலே பட்டாசுத் தொழிற்சாலை தொடங்க தொழில் வளர்ச்சித் துறை திட்டம் தயாரித்திருக்கிறது. அதை விரைவிலே செயற்படுத்த அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனிக் கேள்வி போடவும்.

1971 ஜூன் 22]

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும்பொழுது சொன்னார்கள், வடார்க்காடு மாவட்டத்தில், இராணிப்பேட்டையிலே வாங்கப்பட்டுள்ள இடத்தில் தொழிற் பேட்டைகள் அமைக்க தனி நபர்களோடு மாவட்ட ஆட்சித் தலைவர் பேசி வருகிறார்கள் என்று. ஆனால் வடார்க்காடு மாவட்டத்தில் பெரிய மூலதனத்தையுடைய பெரிய தொழில் அதிபர்கள் இல்லாததால் அரசாங்கமே பங்கேற்று, ஏறத்தாழ 800 ஏக்கர் அளவிற்கு இருக்கும் அந்த இடத்தில் பெரிய தொழிற் சாலை அமைக்க முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வடார்க்காடு மாவட்டத்திலேதான் ஏற்றுமதியாளர்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே, அங்கேயிருப்பவர்கள் தொழில் ஆரம்பிக்கத் தகுதியற்றவர்கள் என்று சொல்வதை நான் ஒப்புக் கொள்ளத் தயாராகயில்லை. ஏராளமான தகுதி படைத்தவர்கள் இருப்பார்கள். அவர்களை முன்வரச் செய்வது மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய கடமை என்று கருதுகிறேன்.

திரு. தொ. ப. சீனிவாசன்: தலைவரவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலைப்பகுதியில் கந்தகம் இருப்பதாக இப்பொழுது ஆராய்ச்சி நடத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட வேலைகள் நடைபெற்றிருப்பதாகத் தெரிகிறது. அது எந்த அளவில் இருக்கிறது? இந்த அரசாங்கமே மேற்கொண்டு எடுத்து நடத்த முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன். இந்தக் கேள்வி தொழிற் பேட்டைகளைப் பற்றியது. கனிப்பொருள்களைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் தெரிவிக்கிறேன்.

வெளி நாட்டுக் கொள்கைகள் பற்றி மாநில அரசுகளின் கருத்துக்கள்.

*16 வினா.—**திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மத்திய அரசு வெளிநாட்டுக் கொள்கைகளை வகுக்கும் போது மாநில அரசைக் கலந்தே செய்ய வேண்டும் என்ற கருத்தை நமது முதல்வர் அவர்கள் அண்மையில் மத்திய அரசிடம் வலியுறுத்தியுள்ளாரா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இல்லை, ஐயா.

திரு. கே. எ. வகாப்: இந்திய உப கண்டத்தில் பொதுவான பிரச்னைகள் வரும்போது, அதாவது நம் நாட்டின் மீது சீனாக் காரர்களோ அல்லது பாகிஸ்தான்காரர்களோ படையெடுத்து வரும்போது தேசிய ஒருமைப்பாடு என்ற அடிப்படையில் நாம் அனைவரும் ஒன்று கூடிப் பாடுபடுவதற்காக மத்திய அரசு நம்மை அழைக்கிறது. ஆகவே, பொதுவான பிரச்னைகளில் நாம்